# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>ஜாதக கதைகளின் சிங்கள பதிப்பு களனி ரஜ மகா விகாரையில் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் வெளியீடு</u>**

நவம் போயா தினத்தை முன்னிட்டு, களனியில் உள்ள ரஜ மகா விகாரையில் அமர் சித்திர கதைகளின் ஐந்து ஜாதக கதைகளின் சிங்கள மொழிபெயர்ப்பினை வெளியிட்டு வைத்ததன் மூலம் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் முக்கியத்துவமிக்க மைல் கல் ஒன்றை எட்டியுள்ளது.

2. இந்தியாவின் மிகப்பெரிய சித்திரக் கதை புத்தக வெளியீட்டாளரான அமர் சித்ர கதைகள் நிறுவனத்தால் வெளியிடப்பட்டு மொழிபெயர்க்கப்பட்ட இந்தப் புத்தகங்கள், தம்மம் கற்கும் மாணவர்களை புத்தபெருமானின் போதனைகளுடன் இலகுவில் ஈர்க்கக்கூடிய மற்றும் அணுகக்கூடிய வழிகளுடன் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. அறநெறி பாடசாலை மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் உட்பட பலர் இவ்வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்ற நிலையில் இந்தப் புத்தகங்களுக்கு சிறந்த வரவேற்பு கிடைக்கப்பெற்றிருந்தது.

3. அத்துடன் குறித்த புத்தக வெளியீட்டுக்கு மேலதிகமாக, களனி ரஜ மகா விகாரையில் 'புத்தம் சரணம் கச்சாமி' என்ற நடமாடும் கண்காட்சியின் இரண்டாவது பதிப்பையும் உயர் ஸ்தானிகராலயம் ஒழுங்கமைத்திருந்தது. புது டில்லியில் உள்ள தேசிய நவீன கலைக்கூடத்தால் தொகுக்கப்பட்ட இந்தக் கண்காட்சி, புத்தபெருமானின் வாழ்க்கையின் முக்கிய அத்தியாயங்களையும், ஏனைய முக்கிய பௌத்த போதனைகளையும் விவரிக்கும் தனித்துவமான ஓவியங்களின் தொகுப்பாக அமைகின்றது. இந்த கண்காட்சியானது வருடம் முழுவதும் நாடளாவிய ரீதியில் உள்ள பல்வேறு பௌத்த விகாரைகளில் ஒவ்வொரு போயா தினத்திலும் காட்சிப்படுத்தப்படும்.

4. ஜாதகக் கதைகளின் சித்திரக் கதைகள் புத்தகங்களின் வெளியீடு மற்றும் கண்காட்சி ஆகிய இரு நிகழ்வுகளும் பௌத்த விழுமியங்களையும் பகிரப்பட்ட பாரம்பரியத்தையும் மேம்படுத்துவதற்காக இந்திய உயர் ஸ்தானிகராலயம் மேற்கொள்ளும் முயற்சிகளின் தொடர்ச்சியாகும். இந்த முயற்சிகள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால கலாசார மற்றும் மத ரீதியான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துகின்ற அதே நேரம் பௌத்த கலாசாரம் பற்றிய ஆழமான புரிதலையும் வளர்க்கின்றன.

********

**கொழும்பு**

12 பெப்ரவரி 2025